ALPHA MIND POWER

# NEWSLETTER



MARCH 2016

## *From Guruji's desk....*



Dear Alpha Siddha,

Writing to you with a lot of love and blessings.

The Exam fever is everywhere. If you are writing some exam or if someone in your family is appearing for an exam, my blessings to study well and write well. Use all the Alpha techniques and you will see how easy it is to pass exams with flying colors.

Since we announced our next yatra to Rishikesh, there have been many queries about the journey. Some even wanted to know the significance of choosing Rishikesh for our spiritual tour. I feel a little clarity on this would help many people.

First and foremost, Rishikesh is called a Dev Bhoomi – the land of the Divine! If you are visiting Rishikesh for the first time, this may raise many questions in your mind. Why is this place called Dev Bhoomi and that too the land of the Divine?

One reason is that many Rishis and Munis have lived and meditated here. Even today we can see some sages all the time in deep meditation. The energy of this place is such that one does not have to make an effort to meditate. You just have to close your eyes and you are in meditation. The same Alpha meditation which we practice here becomes much more powerful when we do it there.

We stay at Swami Dayanand Saraswathi Ashram which is on the banks of the Ganges. Believe me, it is a great experience to be able to take a dip in the Ganges every morning! There is also a Shiva temple within this Ashram. We can take part in the abhishekam and pooja performed every day.

It is believed that Divine beings come down to take a dip in the Ganges in the early morning hours! And many times during our meditations there, our Alpha Siddhas have experienced the presence of Divine energies! That is what makes this a Dev Bhoomi!

We go to Haridwar for a dip in the Ganges at a particular point called Brahmakundam. From there we go to an Ashram where Swami Lahiri Mahasaya's Samadhi is built. He was the first disciple of Mahavatar Babaji. Sitting there beneath his Samadhi and meditating is an experience which cannot be described. That moment is unforgettable and becomes a milestone in your spiritual growth.

It was in 2009 when I first sat there that I thought this is something that our Alpha Siddhas should experience! And that is when I decided to bring Alpha Siddhas to Rishikesh. So, for me, it is a very important moment and a very special place.

Once you have experienced that kind of energy, your meditations will not be the same. Even when you come back to your own place, every time you meditate, you will see the difference.

We also visit the cave on the Himalayas where Vasisht Rishi lived and meditated. I have no words to express the energy that we feel there. Every Alpha Siddha who has visited this cave has felt the presence of the Rishi and his energy and his blessings as well. And that is what people like us seek in our spiritual path!

We are not like Rishis and Munis who renounced everything and lived in the mountains in a meditative state all the time. We live our own lives, each in our own way. Amidst all the problems and difficulties we also try to meditate. We wish to experience mental peace in meditation. In Rishikesh one can easily experience this quietness. And this makes our meditations deeper and more fulfilling.

And last but not least, every time we went to Rishikesh, I have noticed the genuine happiness on the face of every Alpha Siddha there. That is the beauty of our yatra. For, it is not a pilgrimage that we make, it is a spiritual journey. And believe me, our Rishikesh yatra has played a very important role in changing the lives of many of our Alpha Siddhas!

As you are aware, the next Rishikesh yatra is planned from 1st June to 5th June 2016. Join me for a taste of ashram life and spiritually uplifting experiences as well.
Blessings for fulfilling meditations and exciting spiritual growth!

*- Srimatha*



## ANNOUNCEMENT! UPCOMING RISHIKESH YATRA

Join us in a spiritually uplifting yatra to Rishikesh with Guruji
Date: 1 – 5 June, 2016
Please contact AMP office for more details & registration. Hurry! Registrations close soon!
Phone: +91 44 2376 0007, +919841272146

அன்புள்ள ஆல்ஃபா சித்தரே,

அன்பும் ஆசீர்வாதமும் கலந்து எழுதுகிறேன்.
இது பரீட்சை நேரம். நீங்கள் பரீட்சை எழுதினாலும் அல்லது உங்கள் வீட்டில் யாரேனும் பரீட்சை எழுதினாலும் உங்களுக்கு எனது ஆசீர்வாதங்கள். ஆல்ஃபாவை நன்றாக பயன்படுத்துங்கள். பரீட்சை எழுதுவதும் சரி சிறப்பாக மார்க் வாங்கி பாஸ் செய்வதும் சரி மிகவும் சுலபம் என்பதை புரிந்து கொள்வீர்கள்.

நமது ரிஷிகேஷ் யாத்திரையை பற்றிய அறிவிப்பு வந்ததிலிருந்து பலர் அதைப் பற்றி விவரங்கள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிலர் நாம் ரிஷிகேஷை நமது யாத்திரைக்கு தேர்ந்தெடுத்த காரணத்தையும் கேட்டிருக்கிறார்கள். அதைப் பற்றிய ஒரு சிறிய விளக்கம் எல்லோருக்கும் உதவியாக இருக்கும் என நினைக்கிறேன்.
ரிஷிகேஷை தேவபூமி என்று அழைக்கிறார்கள் – தேவர்களின் பூமி! நீங்கள் முதன்முதலாக ரிஷிகேஷ் செல்பவரானால் ஒரு கேள்வி நிச்சயம் உங்கள் மனதில் எழும். இந்த இடத்திற்கு எதனால் தேவ பூமி என்றும் தேவர்கள் பூமி என்றும் பெயர் வந்தது.

பல ரிஷிகளும் முனிவர்களும் வாழ்ந்து தவம் செய்த இடம் இது. இன்றும் பல சித்தர்கள் ஆழ்ந்த தியானத்தில் இருப்பதை இங்கு காண முடிகிறது.இந்த இடத்தின் சக்தி அற்புதமாக இருப்பதால் இங்கு தியானம் செய்ய ஒரு முயற்சியே தேவை இல்லை. கண்களை மூடினாலே தியான நிலை தான். நாம் பழகும் அதே ஆல்ஃபா தியானம் அங்கு செய்யும் பொழுது இன்னும் சக்தி வாய்ந்ததாக இருப்பதை உணர முடிகிறது.

ரிஷிகேஷில் கங்கை கரையில் அமைந்திருக்கும் ஸ்வாமி தயானந்த சரஸ்வதி ஆசிரமத்தில் நாம் தங்குவோம். தினமும் கங்கையில் குளிப்பதே ஒரு தெய்வீகமான அனுபவம் தான். ஆசிரமத்தில் இருக்கும் சிவன் கோவிலில் நடக்கும் அபிஷேகம் மற்றும் பூஜையிலும் நாம் தினமும் கலந்து கொள்ளலாம்.

அதிகாலை நேரத்தில் தேவர்கள் வந்து கங்கையில் குளிக்கிறார்கள் என்று நம்பப் படுகிறது. அங்கு தியானம் செய்யும் பொழுது நமது ஆல்ஃபா சித்தர்கள் பலர் அந்த தெய்வீக சக்திகளை உணர்ந்திருக்கிறார்கள். இதனால் தான் இந்த இடம் தேவ பூமி என அழைக்கப்படுகிறது!

ஹரித்துவாரில் கங்கையில் பிரம்மகுண்டம் என்ற இடத்தில் சிறப்பான கங்கை குளியல் செய்வோம். அங்கிருந்து ஸ்வாமி லஹிரி மஹாசாயாவின் சமாதி கட்டப்பட்ட ஆசிரமத்திற்கு செல்வோம். மஹா அவதார் பாபாஜியின் முதல் சீடர் அவர். அவரது சமாதிக்கு அடியில் அமர்ந்து தியானம் செய்வது என்பது விவரிக்க இயலாத ஒரு அனுபவம். மறக்க முடியாத ஒரு அனுபவமாகவும் நமது ஆன்மீக வளர்ச்சியில் ஒரு மைல்கல்லாகவும் அது அமைந்து விடுகிறது.

2009ல் அங்கு அமர்ந்து தியானம் செய்த பொழுது தான் எனக்கு தோன்றியது இது போன்ற அனுபவம் நமது ஆல்ஃபா சித்தர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று. அப்பொழுது தான் முடிவு செய்தேன் ஆல்ஃபா சித்தர்களை நிச்சயம் இங்கு அழைத்து வர வேண்டும் என்று. அதனால் என்னைப் பொறுத்தவரை அந்த கணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அந்த இடம் தனித்துவம் வாய்ந்ததாகவும் அமைந்து விட்டது.

அங்குள்ள சக்தியை உணர்ந்த பிறகு உங்கள் தியானங்களின் அனுபவமே வேறு விதமாக இருக்கும்.ஊர் திரும்பிய பின்பும் ஒவ்வொரு முறை தியானம் செய்யும் பொழுதும் அந்த வித்தியாசத்தை நிச்சயம் உணர்வீர்கள்.
இமய மலையில் வசிஷ்ட ரிஷி இருந்து தவம் செய்த குகைக்கு செல்வோம். அங்கு நாம் உணரும் சக்தியை விவரிக்க வார்த்தைகளே இல்லை இங்கு வந்த ஒவ்வொரு ஆல்ஃபா சித்தரும் அந்த ரிஷியின் அருகாமையை, சக்தியை, ஆசீர்வாதங்களை உணர்ந்திருக்கிறார்கள். நம்மை போல் ஆன்மீக பாதையில் இருப்பவர்கள் இது போன்ற அனுபவங்களைத்தானே தேடுகிறோம்.

நாம் முற்றும் துறந்த முனிவர்கள் போல் எந்த நேரமும் தியானத்தில் இருக்க முடிவதில்லை. அவரவர்கள் வாழ்க்கையை பலவிதமான பிரச்சினைகளோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். அத்தனைக்கும் நடுவில் தியானம் செய்ய முயற்சி செய்கிறோம்.தியானத்தில் மன நிம்மதியை தேடுகிறோம். ரிஷிகேஷில் இந்த அமைதி மிக சுலபமாக கிடைத்து விடுகிறது. இதுவே நமது தியானங்களை மேலும் ஆழ்ந்தவையாக மன நிறைவை தருபவையாக மாற்றுகின்றது.

கடைசியாக ஒன்று சொல்ல வேண்டும். ஒவ்வொரு முறை ரிஷிகேஷ் சென்ற போதும் நமது ஆல்ஃபா சித்தர்களின் முகத்தில் உண்மையான சந்தோஷத்தை என்னால் பார்க்க முடிந்தது. அதுதான் நமது யாத்திரையின் சிறப்பு. காரணம் இது ஒரு புனித யாத்திரை மட்டுமல்ல ஒரு ஆன்மீக பயணமும் கூட. இந்த ரிஷிகேஷ் யாத்திரை பல ஆல்ஃபா சித்தர்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய திருப்புமுனையாகவே அமைந்திருக்கிறது.

நமது அடுத்த ரிஷிகேஷ் யாத்திரை ஜூன் 1லிருந்து 5ம் தேதி வரை என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆசிரம வாழ்க்கையை அனுபவித்து பார்க்கவும் உயர்ந்த ஆன்மீக அனுபவங்களைப் பெறவும் என்னுடன் இந்த யாத்திரையில் கலந்து கொள்ளுங்கள்.
உங்கள் தியானங்கள் சிறக்கவும் ஆன்மீகம் வளரவும் எனது ஆசீர்வாதங்கள்,

- ஸ்ரீமாதா


**குருஜியுடன் ரிஷிகேஷ் யாத்திரை!**

*தேதி: 01.06.2016 முதல் 05.06.2016 வரை*

மேலும் விவரங்களுக்கு ஆல்ஃபா மைண்ட் பவர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும

Phone: +91 44 2376 0007, +919841272146

"My son was facing a lot of problems from his classmates. He did not want to go to school. I also complained to his teacher but nothing much happened. Then, I started sending colours to his class, students and teachers. I did this for a week and, now I see lot of changes in my son, he is happy and no one troubles him now. Thanks to Alpha and Guruji!"

***Ms.Lavanya, Bengaluru***




"என்னுடைய மகன் படிக்கும் பள்ளியில் அவனுடன் படிக்கும் சகமாணவர்கள் அவனுக்கு மிகுந்த தொல்லைகள் கொடுத்துவந்தனர். இதனால் என் மகன் பள்ளிக்கு செல்வதையே விரும்பவில்லை. நானும் அவனுடைய பள்ளி ஆசிரியர்களிடம் புகார் செய்துபார்த்தேன். எனினும் எந்த பயனும் இல்லை. பிறகு நான் ஆல்ஃபா தியானத்தின் மூலம் தொடர்ந்து ஒருவாரம் பள்ளிக்கும், அவன் வகுப்பறைக்கும், சகமாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தொடர்ந்து நிறங்கள் செலுத்திவந்தேன். இப்பொழுது என் மகன் எந்த பயமும் இல்லாமல் பள்ளிக்கு மகிழ்ச்சியுடன் சென்றுவருகிறான். ஆல்ஃபாவிற்கும், குருஜிக்கும் நன்றி." **திருமதி லாவண்யா—பெங்களூரு**

"My daughter's friend lost her father when she was young. Nowadays she keeps saying that she will also die. My daughter did Alpha for the last three days for her. Today her attitude changed. My daughter is so happy. Thanks to Alpha. It does wonders."***Ms. Abirami, Bengaluru***

"என்னுடைய மகளின் தோழி சிறுவயதிலேயே அவளுடைய தந்தையை இழந்துவிட்டாள். இதனால் அவள் தானும் இறந்து விடப்போவதாக கூறி வந்தாள். என்னுடைய மகள் அவள் தோழிக்காக தொடர்ந்து மூன்று நாட்கள் ஆல்ஃபா தியானம் செய்து அவள் ஆழ்மனதுடன் பேசிவந்தாள். இப்பொழுது அவளின் மனப்பான்மை மாறிவிட்டது. என்னுடைய மகளும் சந்தோஷமாக இருக்கிறாள்." **திருமதி அபிராமி—பெங்களூரு**

"I have completed level 1 and I practice regularly. I am 30 years old. My weight is 80 Kgs. My parents have been trying a lot to find a groom for my marriage. All the grooms rejected me because of my appearance. Then with Guruji's blessings I took three sessions of **'Alpha Music Therapy'**. In a few months my weight reduced to 60 Kg. My marriage also got fixed in the next two months. Thanks to Alpha and Guruji!", ***Ms. Rukmani, Chennai***

"நான் ஆல்ஃபா தியானம் முதல் கட்டம் முடித்து தொடர்ந்து பயிற்சி செய்து வருகிறேன். எனக்கு வயது 30 ஆகிறது. என்னுடைய எடை 80 கிலோ இருந்தது. எனக்கு திருமணம் முடிப்பதற்காக என் பெற்றோர் எவ்வளவோ வரன் தேடி அலைந்தார்கள். வரும் மாப்பிள்ளைகள் அனைவரும் என்னுடைய தோற்றத்தை பார்த்து வேண்டாம் என்று கூறி விடுகிறார்கள். பிறகு குருஜியின் ஆலோசனைப்படி **'ஆல்ஃபா மியுசிக் தெரபி'** மூன்று நாட்கள் எடுத்துக் கொண்டேன். அடுத்த சில மாதங்களில் என்னுடைய எடை 60 கிலோவாக மாறிவிட்டது. அடுத்த 2 மாதங்களில் எனக்கு திருமணம் நிச்சியக்கபட்டுவிட்டது. ஆல்ஃபாவிற்கம், குருஜிக்கும் நன்றி!"

**ருக்குமணி—சென்னை**

"My 13 year old son and his friends pressed the calling bell of a house by mistake thinking it is their friend's house. The owner of the house gave a complaint to the police that they did this with the intention of breaking the lock. Although we tried our best to explain that the children were innocent, the police were angry with them and asked us to come again the next day at 11 am. I used Alpha mudra and kept projecting colors on the policemen. Surprisingly that police officer looked at us and just went away! We waited for an hour. Then he came back and called our association secretary to his room. He just informed him that we can go home! Thanks to Guruji! It was a miracle!" ***Alpha Siddha***

"என்னுடைய 13 வயது நிரம்பிய மகனும் அவனது தோழர்களும் தங்களுடைய தோழன் வீடு என்று நினைத்து வேறு ஒருவர் வீட்டின் காலிங்பெல்லை அழுத்திவிட்டர்கள். அந்த வீட்டின் உரிமையாளர் மேல் பூட்டை உடைக்க திட்டமிட்டுதான் இதை இவர்கள் செய்தார்கள் என்று கோபப்பட்டு காவல் துறையினரிடம் என் பையனையும் மற்றும் அவனுடன் சென்ற சகதோழர்கள் மீதும் புகார் செய்துவிட்டார். அவர்கள் தெரியாமல் செய்துவிட்டார்கள் என்று நாங்கள் எடுத்துக்கூறியும் போலீஸ் கேட்காமல் இவர்கள் மேல் ஆத்திரமடைந்து அவர்கள் அனைவரையும் மறுநாள் 11.00 மணிக்கு காவல் நிலையத்திற்கு வரச் சொல்லிவிட்டார்கள். நான் உடனே ஆல்ஃபா முத்திரையை பயன்படுத்தி காவல் துறையினர் மேல் தொடர்ந்து நிறங்கள் செலுத்தி வந்தேன். என்ன வியப்பு! அந்த காவல் அதிகாரி எங்களை பார்த்துவிட்டு எதுவும் நடக்காதது போல் சென்றுவிட்டார். ஒருமணி நேரம் காத்திருந்தோம். மீண்டும் அங்கு வந்த காவல் அதிகாரி எங்கள் சங்க செயலாளரை தன்னுடைய அறைக்கு அழைத்தார். எங்களை வீட்டிற்கு செல்லாலாம் என்று கூறிவிட்டார். இது ஒரு ஆச.சரியம் தான்! குருஜிக்கும், ஆல்ஃபாவிற்கும் கோடானுகோடிநன்றி!"

**ஆல்ஃபா சித்தா**

---

***Guruji's TV programs are telecast in these channels. Don't miss them!***

Saturdays, 9:00 AM

**MAKKAL TV**

Mondays, 1:30 PM

***Recordings of the programs can be viewed at our website www.alphamindpower.net***

***AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Reach out to us now!***

We are on WhatsApp! To connect with us and receive instant updates from AMP on upcoming events, share Alpha experiences send a WhatsApp message to +917358595493 mentioning your name and city.

AMP வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டு வருகின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குரூப்பில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து +917358595493 என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குரூப்பில் இணைக்கப்படுவீர்கள்

facebook **https://www.facebook.com/groups/alphamindpower/**

**AMP Monthly Meetings – Please contact the below Alpha Siddhas for details of monthly meetings in your city.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Bangalore | Mr.Pandith<br>Mr.Ravishankar | 9900422771<br>9449458123 | Mumbai | Mr.Shreyansh Patravali<br>Mr.Yogesh | 9969472894<br>8080080089 |
| Chennai | Ms.Pushpalatha<br>Ms.Saraswathy | 9841272146<br>7299987717 | Pondicherry | Mr.Ramani Shankar | 9626260622 |
| Coimbatore | Mr.Subramaniam | 9443003723 | Salem | Mr.Ramakrishnan | 9443226770 |
| Delhi | Mr.Anjesh Agarwal<br>Ms.Sangeetha Luthra | 9310065975<br>9818249223 | Tirunelveli<br>Trichy | Mr.Jegan<br>Ms.Usha Nandini | 9942284345<br>9688760742 |
| Goa | Ms.Philomina | 9325503194 | Thanjavur | Ms.Priya Krishnan | 9551254699 |
| Madurai | Mr.Jayaraman | 8124622085 | Tuticorin & Nagercoil | Mr.Lakshmanan | 9500017020 |



## Upcoming classes' schedule

NOTE: Please call & register with AMP office before attending any of the workshops

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Chennai (Tamil) | Level – 2<br>Level – 3<br>Psychic Energy<br>Level – 1 | 17/03/16<br>18/03/16<br>19/03/16<br>20/03/16 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm on all specified dates. | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai - 17 |
| Madurai (Tamil) | Level – 2<br>Level – 3<br>Srividya<br>Level – 1 | 24/03/16<br>25/03/16<br>26/03/16<br>27/03/16 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm on all specified dates | Hotel Poppys, Near Meenakshi Mission Hospital, Mattuthavani – Airport Ring Road, Madurai |
| Coimbatore (Tamil) | Level – 2<br>Level – 3<br>Srividya<br>Level – 1 | 07/04/16<br>08/04/16<br>09/04/16<br>10/04/16 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm on all specified dates | Hotel Grand Regent, 708, Avinashi Road, Coimbatore |
| Trichy (Tamil) | Level – 2<br>Level – 3<br>Agnikundam<br>Level – 1 | 21/04/16<br>22/04/16<br>23/04/16<br>24/04/16 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm on all specified dates | Hotel Breeze Residency, Mcdonalds Road, Trichy |

*Printed & Published for*

ALPHA MIND POWER™
AMP
"Power of the Subconscious Mind"

*Dr. Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai – 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

*PRINTED MATERIAL*